IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
**OS.No. 25/2021**

| **DEPOSITION OF WITNESS** | **PW.2** |
|---|---|

| | | | |
|---|---|---|---|
| NAME | யோகராஜ் | TALUK | குடியாத்தம் |
| FATHER NAME | பசவராஜ் | RELIGION | இந்து |
| AGE | 32 | CASTE | |
| VILLAGE | குடியாத்தம் | OCCUPATION | உதவி பொறியாளர் |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 15.12.2023

1. நான் குடியாத்தம் நெடுஞ்சாலை துறையில் உதவி பொறியாளராக பணி புரிந்து வருகிறேன். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்துள்ளது. இவ்வழக்கின் விவரம் எனக்கு தெரியும்.

2.எனக்கு முன்பு பணியில் இருந்த உதவி பொறியாளர் 28.07.2020 ல் ஒரு நினைவூட்டுக் கடிதம் வட்டாட்சியருக்கும், RDO க்கும் அனுப்பிள்ளார் இதன் பின்பு 18.08.2020 மற்றும் 19.08.2020, 26.09.2020, 09.10.2020, 09.11.2020, 12.07.2022 மற்றும் 11.08.2022 ல் குடியாத்தம் தமிழ்நாடு அரசு பேருந்து பணிமனைக்கு எதிரில் உள்ள செல்வம் ஓட்டலை அளவீடு செய்து தருவதற்காக மேற்கண்ட தேதிகளில் கடிதங்கள் அனுப்பட்டுள்ளது. மேற்கண்ட நினைவூட்டு கடிதங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன் அவைகள் Ex.X.1 முதல் Ex.X.8 வரை குறியீடு செய்யப்படுகிறது.

3.27.07.2020 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு கிடைக்கப்பட்டது. அதை சார்ந்து தான் எனக்கு முன்பு இருந்த உதவி பொறியாளர் வட்டாட்சியருக்கு மேற்சொன்ன கடிதங்களை அனுப்பினார்.

4.மேற்கண்ட வழக்கறிஞர் அறிவிப்புக்கு நெடுஞ்சாலை துறை சார்பில் பதில் அறிவிப்பும் கொடுக்கப்பட்டது. வட்டாட்சியரால் அளவீடு செய்து கொடுத்தால் நாங்கள் முறைப்படி நடவடிக்கை எடுக்கிறோம் என்று பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளோம்.

5.இன்றைய தேதி வரையில் எங்கள் எல்லைக்கு உட்பட்ட அனைத்து சாலைகளும் பரிசோதனை செய்து தான் வருகிறோம். நாங்கள் சோதனை செய்து வரும் சாலையானது பள்ளிகொண்டா முதல் பலமநேர் சாலை ஆகும்.

6.நெடுஞ்சாலையில் யாரேனும் ஆக்கிரமிப்பு செய்தால் அதனை உடனே வட்டாட்சியரால் அளவீடு செய்யப்பட்டு அதன் பின்பு சட்டப்படி நடவடிக்கை எடுத்து ஆக்கிரமிப்புகளை அகற்றுவோம்.

7.மேற்கண்ட வழக்கு சம்பந்தமாக வட்டாட்சியருக்கும் ஆர.டி.ஓ வுக்கும்

கடிதங்கள் அனுப்பியதை தவிர வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வட்டாட்சியரால் சம்பந்தப்பட்ட சொத்தை அளவீடு செய்த பின்பு தான் நாங்கள் சட்டப்படி மேல் நடவடிக்கை எடுப்போம். ஆக்கிரமிப்பு அகற்றுவதற்கான நடவடிக்கைகள் நிலுவையில் உள்ளது.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/.M.N.Rajananhivarmasiva,
District Munsif,
Gudiyattam.